

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.6.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டதற்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.6.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை திறந்து வைத்து மருத்துவப் பரிசோதனை செய்வதை பார்வையிட்டார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதா கிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




07.06.2023 புதன்கிழமை மாலை 5 மணியளவில், பின்னி மில் மைதானம், புளியந்தோப்பு,சென்னையில் நடக்கும் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவில்

கழகத் தலைவர்
மாண்புமிகு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின்

அவர்கள் சிறப்புரையாற்றி சிறப்பித்தமைக்கு நன்றி !நன்றி!!!

21.01.1991 ல் ( 30 ஆண்டுகளுக்கு முன் ) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கத்தின் வைரவிழா, நான்காவது மாநில மாநாட்டில் கோரிக்கை என்ன? என்றார் அன்றைய முதலமைச்சர் அண்ணல் கலைஞர்.

நான், கோவில் இல்லா ஊரா, கோரிக்கை இல்லா சங்கமா, கோவிலாய் கடவுளாய் நீங்கள் ஆண்டவராய் ஆள்பவராய், வீற்றிருக்கையில் கோரிக்கை எமக்கில்லை கோமானே! என்றேன். நாங்கள் வைத்த அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி தந்தமைக்கு நன்றி கூறவே, வள்ளுவர் கோட்டத்தில் நடக்கும் சங்கத்தின் இந்த வைர விழாவும் நான்காவது மாநில மாநாடும் என்றேன், சங்கத்தின் மாநில செயலாளராக இருந்த நான்.

பணிக்காலம் முழுவதும், பதவி உயர்வே இல்லாத அலுவலக உதவியாளர்கள், ஒட்டுநர்களுக்கு தேர்வு நிலை, சிறப்பு நிலை ஊதியம் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தந்த உத்தமர் கலைஞர்.

அரசு பணியாளர்களை அரவணைத்து பாதுகாத்தவர் அண்ணல் கலைஞர்.

முந்தைய அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகளாக ஓய்வு ஊதியத்திற்கென பிடித்தம் செய்யப்பட்ட 64000 கோடியைக் கொண்டும், அரசு அலுவலர்களின் பங்களிப்பு தொகையையும், கம்யூடேசன், டி சி ஆர் ஜி இவைகளின் விகிதங்களைச் சரிசெய்து பணியாளர்களுக்கு வழங்கிட வாய்ப்புக்கள் உள்ளதாகவும், இதில் அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படாமல், குழுக்கள் அமைத்து கலந்து பேசி, நிதி மேலாண்மை மூலமே சரிசெய்து விடலாம் என்றும் கூறப்படுகிறது.

பழைய பென்சன் முறை காலப்போக்கில் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கழகம் அறிவித்திருக்கிறது. தங்கத்தை நிதியாக்கி, அரசை அதன் அமைச்சராக்கி அகவிலைப்படி உயர்வைத் தடங்கலின்றி வழங்கிய வள்ளல் நம் முதலமைச்சர் அவர்கள். கலைஞர் நூற்றாண்டில் பழைய பென்சன் திட்டத்தை அறிவித்து வழங்கி, அரசு பணி நண்பர்களின் வயிற்றில் பால் வார்ப்பீர்கள் என்று அனைவராலும் நம்பப்படுகின்றது. அரசு பணி நண்பர்களின் பாதுகாவலர் ஆவார், நம் கலைஞரின் மகன், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று நம்பிக்கையுடன் காத்துள்ளனர் தமிழக அரசுப் பணி நண்பர்கள்.

சொன்னதையும் சொல்லாததையும் செய்யும் தலைவரே,
இவர்களுக்கும் இரக்கம் காட்டி உதவுங்கள். நன்றி!

அக்ரி கணேசன், Msc.,(Agri),
முன்னாள் மாநில செயலாளர், மாநிலத் தலைவர்
அகில இந்திய செயலாளர், அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம்.



அரசு தொழிற்பயிற்சி நிலையம், ஒரகடத்தில்,
டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து

ரூ.762.30 கோடி மதிப்பீட்டில்
22 அரசு தொழிற் பயிற்சி
நிலையங்களின் அமைக்கப்பட்டுள்ள
தொழில் 4.0
தொழில்நுட்ப மையங்களை

நாள் : 08.06.2023 வியாழன் காலை 10.30 மணிக்கு
துவக்கி வைத்து பேருரையாற்ற வருகை தரும்

மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்

அவர்களை வருக! வருக!! என வரவேற்கிறோம்...

திருமிகு
டி.ஆர்.பாலு M.P
கழக பொருளாளர்
ஸ்ரீபெரும்புதூர் பாராளுமன்ற உறுப்பினர்

மாண்புமிகு
தா.மோ.அன்பரசன்
குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்
நிறுவனங்கள் துறை அமைச்சர்

மாண்புமிகு
சி.வி.கணேசன்
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

திருமிகு
க.சுந்தர் B.Sc., MLA
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர்
உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர்

வழக்கறிஞர்,
சி.வி.எம்.பி.எழிலரசன் B.E.,B.L., MLA
செயலாளர், தி.மு.க. மாணவர் அணி
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்

